**தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)(பொ)-இன் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திருமதி.செ.விமலாராணி.,எம்.எஸ்ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பி.ஏ.,எம்.பில்.,**

**ந.க.எண். அ2/5124/2019** **நாள். 17.11.2021.**

பொருள்: **பொதுப்பணிகள்** – பணிவரன்முறை – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு-IV – 2015-16, 2016-17 மற்றும் 2017-18 – தேனி மாவட்ட வருவாய் அலகிற்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர்) பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தெரிவாளர்கள் பட்டியல் வரப்பெற்றது – திரு.அ.சத்தியராஜ் என்பவர் இளநிலை உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டு, பணிநியமனம் வழங்கியது – சாதிச்சான்று மெய்த்தன்மை அறிக்கை வரப்பெற்றது – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

படிக்கப் பட்டவை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.959/PSD-C3/2019, நாள்.15.02.2019 & 01.04.2019.
2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தேனி செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/5124/19, நாள்.28.02.2019 & 15.04.2019.
3. இவ்வலுவலகக் கடிதங்கள் ந.க.எண்.அ2/ 5124/2019, நாள்.17.07.2019, 25.09.2019, 03.02.2020, 21.01.2021 & 24.02.2021.
4. தமிழ்நாடு மாநில அளவிலான கண்காணிப்புக்குழு-III, ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலத்துறை, சென்னை செயல்முறை ஆணைகள் எண்.12552/சிவி-6/2019-4, நாள்.18.10.2021.
5. சார் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.959/PSD-C3/2019, நாள்.08.02.2021 & 15.03.2021.
6. தொடர்புடைய ஆவணங்கள்.

**********

**ஆணைகள்**

தேனி மாவட்ட வருவாய் அலகு, தேனி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் திரு.அ.சத்தியராஜ் என்பவர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு-IV-2015-16, 2016-17 மற்றும் 2017-18 மூலம் பார்வை 1-இல் கண்டுள்ள தேர்வாணையக்கடிதங்களின்படி, தேனி மாவட்ட வருவாய் அலகிற்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர்)-ஆகத் தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2-இல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி, தேனி மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 06.03.2019 முற்பகல் பணியேற்பு செய்துள்ளார்.

இந்நேர்வில், தனியர் இந்து-மலையாளி இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவருடைய சாதிச்சான்று மெய்த்தன்மை குறித்து மாநில அளவிலான கண்காணிப்புக்குழுவின் விசாரணை அறிக்கை பெற்ற பின்னரே தனியரின் பணியினை வரன்முறை செய்ய வேண்டும் என பார்வை 1-ல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியரால் கீழ்க்காணும் விவரப்படி வழங்கப்பட்டுள்ள தனியரின் சாதிச்சான்று குறித்த மெய்த்தன்மை அறிக்கையினை அனுப்பிடுமாறு பார்வை 3-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதங்கள் சென்னை, ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலத்துறை, மாநில அளவிலான கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

| சான்றிதழ் வரிசை எண். | தனிப்பதிவேடு வரிசை எண். | சாதி | சான்று வழங்கப்பட்டுள்ள வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|---|
| ST 193412 | R.Dis. அ7/5034/ 2007, 30.05.2007. | இந்து-மலையாளி | கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டம், விழுப்புரம் மாவட்டம். (தற்போதைய கள்ளக்குறிச்சி மாவட்டம்). |

இந்நேர்வில், பார்வை 4-இல் கண்ட கடிதத்தின்படி, தனியருக்கு மேற்கண்ட விவரப்படி வழங்கப்பட்டுள்ள சாதிச்சான்று மெய்த்தன்மையுடையது என சென்னை, ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலத்துறை, மாநில அளவிலான கண்காணிப்புக்குழுவிடமிருந்து அறிக்கை வரப்பெற்றது.

எனவே, பார்வை 4-ல் கண்ட கடிதத்தின்படி, வரப்பெற்ற மெய்த்தன்மை அறிக்கையினை ஏற்று, தேனி மாவட்ட வருவாய் அலகு, தேனி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் திரு.அ.சத்தியராஜ் என்பவரது பணியினை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் அவர் பணியில் சேர்ந்த நாளான **06.03.2019 முற்பகல்** முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV for the year 2015-16, 2016-17 and 2017-18."

(ஒப்பம்) செ.விமலாராணி,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது),தேனி.

/உ.ந.உ.ப/

17/11/21

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர் : திரு.அ.சத்தியராஜ்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி.

நகல் : செயலாளர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
பிரேசர் பாலம் ரோடு, சென்னை-600 003.
நகல் : "அ2" இருப்புக்கோப்பு மற்றும் இருக்கைக்கு.